**வாக்குமூலம்**

**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

**வேலூர் @ இராணிப்பேட்டை**

**வழக்கு எண். SC. 51 / 2018**

**வழக்கு சாட்சி அ.சா. 25**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சண்முகப்பிரியா | ஜாதி | : | பார்க்கவகுல மூப்பனார் |
| தந்தை பெயர் | : | தர்மராஜ் | தொழில் | : | தலைமை குற்றவியல் நீதிபதி |
| கிராமம் | : | கும்பகோணம் | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | கும்பகோணம் | வயது | : | 44 |

**(எதிரிகள் 1, 2 மற்றும் 6 ஆஜர். 5ம் எதிரி தரப்பில் கு வி மு ச 317 ன் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**
**( 3 மற்றும் 4 எதிரிகள் ஏற்கனவே காலமாகிவிட்டனர்)**
**தேதி – 01.03.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவராக கும்பகோணத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு நான் அரக்கோணம் நீதித்துறை நடுவராக பணியாற்றியபோது சோளிங்கர் நீதித்துறை நடுவராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். அப்போது ஆற்காடு கிராமிய வட்டம் வாலாஜாபேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் கு எண் 424/2015 பிரிவுகள் 302, 201 இதச ன் கீழான வழக்கில் சந்தேக எதிரியான ஆனந்த் (எ) ஆனந்த்பாபு த/பெ. சந்திரசேகர், 2வது மெயின் ரோடு, பரிமளா நகர், நந்தினி லே அவுட், பெங்களூர் 96. 2) ரஞ்சித் வயது 28, த/பெ. ராஜி, நம்பர் 34, முதல் மெயின் ரோடு, 3வது கிராஸ், பரிமளா நகர், நந்தினி லே அவுட், பெங்களூர் 96 மற்றும் அருண் (எ) அருண்குமார், வயது 28, த/பெ. அன்பழகன், நம்பர் 41/ஏ, முதல் மெயின் ரோடு, 3வது கிராஸ், பரிமளா நகர், நந்தினி லே அவுட், பெங்களூர் 96 என்பவர்களுக்கு அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டும் என்று வேலூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் கொடுத்த வேண்டுகோளின் படி கடந்த 13.02.2015 வேலூர் தலைமை

குற்றவியல் நீதித்துறை நடுவரின் செயல்முறை ஆணைப்படி டிஸ் நம்பர் 442/2015 / பி1 படி சோளிங்கர் நடுவர் நீதிபதியாக பணியாற்றிய என்னை அடையாள அணிவகுப்பு நடத்துமாறு செயல்முறை ஆணை எண் 3400/2015/ பி1 தேதி 24.11.2015 ம் தேதியிட்ட நியமனத்தின் அடிப்படையில் எனக்கு அந்த செயல்முறை ஆணை கிடைக்கப்பெற்று நான் சோளிங்கர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றவியல் பல்வகை மனு எண் 5127/2015 கோப்பிற்கு எடுத்து சாட்சி மணிகண்டன், வயது 23, த/பெ. வெங்கடேசன், ந.51, டீச்சர் நகர், வாலாஜா பேட்டை என்பவரை வேலூர் மத்திய சிறையில் 10.12.2015 அன்று மாலை 4.00 மணிக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பினேன். மேலும் அனடயாள அணிவகுப்பு நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடந்த 08.12.2015 ம் தேதி வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். அதன் அடிப்படையில் நான் 10.12.2015 ம் தேதி மாலை 4.10 மணியளவில் வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு என்னுடைய சோளிங்கர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ் என்பவருடன் சென்றேன். அங்கு நுழைவாயிலில் சாட்சி மணிகண்டன் ஆஜரில் இருந்தார். அவரது பெயர், விலாசம் மற்றும் அவரது அடையாளங்களை உறுதி செய்துகொண்டேன். பிறகு மாலை 4.20 மணியளவில் வேலூர் மத்திய சிறைச்சாலைக்குள் நுழைந்தேன். அங்கு சாட்சி மணிகண்டனிடம் அவர் கொடுத்த வாக்குமூலத்தினை பதிவு செய்து அவரிடம் இருந்து கையொப்பம் பெற்றுக்கொண்டேன். மேலும் சாட்சி மணிகண்டனை வேலூர் மத்திய சிறையில் இருந்த நேரகாப்பாளர் அருகிலேயே இருக்குமாறு நான் கூறும் வரை அங்கு இருக்குமாறு கூறிவிட்டு மத்திய சிறைச்சாலைக்குள் சென்றேன். அங்கு அடையாள அணிவகுப்பு மத்திய சிறைச்சாலையில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வளாகம் தெற்கு நோக்கி இருந்தது. நான் மேற்கு நோக்கி அமர்ந்தேன். அதன் பிறகு சந்தேக எதிரிகள் ஆன்ந்த (எ) ஆனந்தபாபு, த/பெ. சந்திரசேகர், ரஞ்சித், த/பெ.ராஜி, அருண் (எ) அருண்குமார், த/பெ. அன்பழகன் ஆகியோரை சிறைச்சாலையில்

பணிபுரிந்தவர்கள் என் முன்பாக ஆஜர்படுத்தினார்கள். அவர்களது பெயர், விலாசம் மற்றும் அடையாளம் ஆகியவற்றினை வாரண்ட்டுடன் ஒப்பிட்டு சர்பார்த்துக்கொண்டேன். பிறகு அவர்களுக்கு அடையாள அணிவகுப்பு நடத்த இருப்பது பற்றி கூறினேன். மேலும் சிறைச்சாலையில் பணிபுரிபவர்களிடம் சந்தேக எதிரிகள் போல் உள்ளவர்கள் மற்றும் அதே வயதை ஒத்தவர்கள் 30 பேரை அழைத்து வரும்படியும் அவர்களை அடையாள அணிவகுப்பு மாதிரிகளாக இருப்பதற்கு தெரிவித்தேன்., அதன்படி சிறைத்துறையினரும் கீழ்க்கண்ட 30 நபர்களை என் முன்பாக ஆஜர்படுத்தினார்கள்.

1. ஆரிப் த/பெ. நவாப், வயது 30

2. ஆனந்தன், த/பெ. சுரேந்தர், வயது 25

3. அண்ணாமலை, த/பெ. வினோபா, வயது 26

4, அறிவழகன் , த/பெ. முனுசாமி, வயது 29

5. அருள் த/பெ. செல்வம் வயது 28

6. பூமிநாதன் த/பெ.முனியப்பன், வயது 25

7. பிட்டிராம் த/பெ. ஜெயபால்சிங், வயது 22

8. தினேஷ் த/பெ.முருகேசன், வயது 25

9.இளவரசன், த/பெ.சுவாமிநாதன், வயது 23

10.கணேஷ், த/பெ.ரவி வயது 23

11. ஹர்ஷாநாமத் த/பெ.நசீர் அகமது வயது 22

12. இப்ராஹிம் த/பெ. முஸ்தபா வயது 27

13. கார்த்திக் த/பெ பழனி, வயது 22

14. கண்ணன் த/பெ. முருகேசன், வயது 23

15.கார்த்திக் த/பெ. மகாலிங்கம் வயது 26

16. குந்தன் த/பெ. கல்லுராம் வயது 24

17.கார்த்திகேயன் த/பெ. பார்த்திபன் வயது 22

18. முருகன் த/ப. அண்ணாதுரை வயது 27

19. மணிமாறன் த/பெ. முனியன் வயது 23

20. மேகநாதன் த/பெ. வெங்கடேசன் வயது 24

21. மணிஷ்குமார் த/பெ. நிரஞ்சன் வயது 23

22. மித்துன் த/பெ. பில்லு வயது 25

23. பிரபாகரன் த/பெ. ஆனந்தன் வயது 23

24. பிரபாகரன் த/பெ. திருமால் வயது 27

25. ராஜூ த/பெ. முனுசாமி வயது 28

26. ரமேஷ் த/பெ. சுவாமி வயது 26

27. ரய்மன் த/பெ. ஹரிதாஸ் வயது 30

28. சத்தீஷ் த/பெ. சடையன் வயது 25

29. சித்திக் த/பெ. அப்துல் அசில் வயது 27

30. வைரமுத்து த/பெ. சின்துரை வயது 29.

மேற்கண்ட நபர்களின் பெயர் மற்றும் தகப்பனார் பெயரை அவர்களிடம் இருந்து கேட்டு தெரிந்து பதிவு செய்துகொண்டேன். மேற்கண்ட 30 நபர்களிடமும் அவர்கள் அடையாள அணிவகுப்பிற்கு மாதிரிகளாக பயன்படுத்த இருப்பதாக கூறினேன். பிறகு சந்தேக எதிரிகள் 3 பேர் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள 30 நபர்களையும் அவர்களது விருப்பப்படி நிற்க சொன்னேன். அவர்கள் தங்களுக்குள் வடக்கிலிருந்து தெற்காக (வலதுபக்கம் இருந்து இடதுபக்கமாக ) அறைவட்டத்தில் கீழ்கண்ட வரிசைப்படி நின்றார்கள்.

1. மணிமாறன் த/பெ. முனியன் வயது 23

2. பிரபாகரன் த/பெ. திருமால் வயது 27

3.இளவரசன், த/பெ.சுவாமிநாதன், வயது 23

4. கார்த்திக் த/பெ பழனி, வயது 22

5. அருண் (எ) அருண்குமார், த/பெ. அன்பழகன், வயது 28

6. பிட்டிராம் த/பெ. ஜெயபால்சிங், வயது 22

**7.** சத்தீஷ் த/பெ. சடையன் வயது 25

8. மேகநாதன் த/பெ. வெங்கடேசன் வயது 24

9. ஹர்ஷாநாமத் த/பெ.நசீர் அகமது வயது 22

10. ஆனந்தன், த/பெ. சுரேந்தர், வயது 25

11. அண்ணாமலை, த/பெ. வினோபா, வயது 26

12. தினேஷ் த/பெ.முருகேசன், வயது 25

13. பூமிநாதன் த/பெ.முனியப்பன், வயது 25

14. ரஞ்சித் த/பெ. ராஜி வயது 28

15. கண்ணன் த/பெ. முருகேசன், வயது 23

16. இப்ராஹிம் த/பெ. முஸ்தபா வயது 27

17. முருகன் த/ப. அண்ணாதுரை வயது 27

18. சித்திக் த/பெ. அப்துல் அசில் வயது 27

19. ஆரிப் த/பெ. நவாப், வயது 30

20. வைரமுத்து த/பெ. சின்துரை வயது 29.

21 . குந்தன் த/பெ. கல்லுராம் வயது 24

22. ரய்மன் த/பெ. ஹரிதாஸ் வயது 30

23.கார்த்திக் த/பெ. மகாலிங்கம் வயது 26

24. அருள் த/பெ. செல்வம் வயது 28

25. பிரபாகரன் த/பெ. ஆனந்தன் வயது 23

26. ரமேஷ் த/பெ. சுவாமி வயது 26

27, அறிவழகன் , த/பெ. முனுசாமி, வயது 29

28. ஆனந்த் (எ) ஆனந்தபாபு த/பெ. சந்திரசேகர் வயது 30

29. கார்த்திகேயன் த/பெ. பார்த்திபன் வயது 22

30. ராஜூ த/பெ. முனுசாமி வயது 28

31.கணேஷ், த/பெ.ரவி வயது 23

32. மித்துன் த/பெ. பில்லு வயது 25

33. மணிஷ்குமார் த/பெ. நிரஞ்சன் வயது 23

மேற்கண்ட வரிசையின் படி நின்றார்கள். அந்த நேரத்தில் சாட்சி, நேர காப்பாளர் அருகே காத்துக்கொண்டிருந்தார். நான் எனது அலுவலக உதவியாளரை அனுப்பி அழைத்து வரச்சொன்னேன். சாட்சி வந்ததும் அவரிடம் அவருக்கு

முன்னால் நின்றுகொண்டிருக்கும் நபர்களில் அவர் யாரையாவது இதற்கு முன்பாக பார்த்திருக்கிறாரா என்று அடையாளம் காட்டச்சொன்னேன். சாட்சி மணிகண்டன் வலதுபக்கத்திலிருந்து இடது பக்கமாக நின்றவர்களை பார்த்து வலது பக்கத்தில் இருந்து 5 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த **அருண் (எ) அருண்குமார், த/பெ. அன்பழகன்** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு வலதுப்பக்கம் இருந்து 14 வது இடத்தில் நின்ற **ரஞ்சித் த/பெ. ராஜி** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு வலது பக்கத்தில் இருந்து 28 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த **ஆனந்த் (எ) ஆனந்தபாபு, த/பெ. சந்திரசேகர்** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு நான் சாட்சி மணிகண்டனை எனது அலுவலக உதவியாளருடன் அனுப்பி வைத்தேன். அவரை நான் கூப்பிடும் வரை நேரக்காப்பாளருக்கு அருகே இருக்குமாறு கூறி அனுப்பி வைத்தேன். அதன் பிறகு நான் சந்தேக எதிரிகள் 3 பேர் மற்றும் மாதிரிகள் 30 பேரையும் மாறி நிற்குமாறும் 3 எதிரிகளையும் அவர்களது உடைகளை மாற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினேன். அவர்கள் அதே அறையில் இருந்த தடுப்பிற்கு பின் சென்று தங்களது உடைகளை மாற்றிக்கொண்டு 33 பேரும் வடக்கிலிருந்து தெற்காக (வலதில் இருந்து இடது புறமாக) கீழ்க்கண்டவாறு வரிசைப்படி அரைவட்டமாக பின்வருமாறு நின்றனர்.

1. மித்துன் த/பெ. பில்லு வயது 25

2. பிரபாகரன் த/பெ. திருமால் வயது 27

3. ஹர்ஷாநாமத் த/பெ.நசீர் அகமது வயது 22

4.கார்த்திக் த/பெ. மகாலிங்கம் வயது 26

5.கணேஷ், த/பெ.ரவி வயது 23

6.ஆரிப் த/பெ. நவாப், வயது 30

7. மேகநாதன் த/பெ. வெங்கடேசன் வயது 24

8. ஆனந்த (எ) ஆனந்தபாபு, த/பெ சந்திரசேகர் வயது 30

9. குந்தன் த/பெ. கல்லுராம் வயது 24

10. அருள் த/பெ. செல்வம் வயது 28

11.இளவரசன், த/பெ.சுவாமிநாதன், வயது 23

12. சித்திக் த/பெ. அப்துல் அசில் வயது 27

13. ரய்மன் த/பெ. ஹரிதாஸ் வயது 30

14 பூமிநாதன் த/பெ.முனியப்பன், வயது 25

15.இப்ராஹிம் த/பெ. முஸ்தபா வயது 27

16. கார்த்திக் த/பெ பழனி, வயது 22

17. சத்தீஷ் த/பெ. சடையன் வயது 25

18.வைரமுத்து த/பெ. சின்துரை வயது 29.

19. ராஜூ த/பெ. முனுசாமி வயது 28

20. மணிமாறன் த/பெ. முனியன் வயது 23

21. ஆனந்தன், த/பெ. சுரேந்தர், வயது 25

22.அருண் (எ) அருண்குமார் த/பெ. அன்பழகன் வயது 28

23. கண்ணன் த/பெ. முருகேசன், வயது 23

24.அண்ணாமலை, த/பெ. வினோபா, வயது 26

25. முருகன் த/ப. அண்ணாதுரை வயது 27

26. பிரபாகரன் த/பெ. ஆனந்தன் வயது 23

27.கார்த்திகேயன் த/பெ. பார்த்திபன் வயது 22

28. மணிஷ்குமார் த/பெ. நிரஞ்சன் வயது 23

29.ரஞ்சித் த/பெ. ராஜி, வயது 28

30. அறிவழகன் , த/பெ. முனுசாமி, வயது 29

31.தினேஷ் த/பெ.முருகேசன், வயது 25

32.பிட்டிராம் த/பெ. ஜெயபால்சிங், வயது 22

33.ரமேஷ் த/பெ. சுவாமி வயது 26

இதற்கிடையே எனது அலுவலக உதவியாளர் சாட்சி மணிகண்டனை விட்டுவிட்டு நான் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். சாட்சி நின்றிருந்த இடத்திற்கும் அடையாள அணிவகுப்பு நடத்தும் இடத்தை பார்க்க இயலாத

வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். மீண்டும் என்னுடைய அலுவலக உதவியாளரை அனுப்பி சாட்சி மணிகண்டனை அழைத்து வரச்சொன்னேன் அவர் வந்ததும் சாட்சி மணிகண்டனிடம் அவருக்கு முன்பாக நின்றிருந்த நபர்களை யாரையாவது அவர் இதற்கு முன்பாக பார்த்துள்ளாரா என்று அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி மணிகண்டன் வடமிருந்து இடமாக நடந்து சென்று வலதில் இருந்து 8 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த ஆனந்த் (எ) ஆனந்தபாபு த/பெ. சந்திரசேகரன் என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பின்பு வலதில் இருந்து 22 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த **அருண் (எ) அருண்குமார் த/பெ. அன்பழகன் வயது 28** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு வலதில் இருந்து 29 இடத்தில் நின்றுகொண்டிருந்த **ரஞ்சித் த/பெ. ராஜி வயது 28** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். நான் சாட்சி மணிகண்டனை எனது அலுவலக உதவியாளருடன் நேரக்காப்பாளருக்கு அருகே செல்லுமாறு அறிவுறுத்தினேன். அவர்கள் இருவரும் சென்றனர். மீண்டும் நான் சந்தேக எதிரிகள் 3 பேர் மற்றும் மாதிரி நபர்கள் 30 பேரிடமும் எதிரிகளின் உடைகளை மாற்றிக்கொண்டு அவர்கள் விருப்பப்படி நிற்குமாறு அறிவுறுத்தினேன். 3 எதிரிகளும் தங்களது உடைகளை மாற்றிக்கொண்டபிறகு 33 நபர்களும் கீழ்க்கண்ட வரிசைப்படி வடக்கிலிருந்து தெற்காக ( வலதில் இருந்து இடதுபுறமாக) அரைவட்டமாக பின்வருமாறு நின்றனர்.

1. சத்தீஷ் த/பெ. சடையன் வயது 25
2. இப்ராஹிம் த/பெ. முஸ்தபா வயது 27
3. ஆனந்தன், த/பெ. சுரேந்தர், வயது 25
4. ரஞ்சித் த/பெ. ராஜி வயது 28
5. ரய்மன் த/பெ. ஹரிதாஸ் வயது 30
6. ரமேஷ் த/பெ. சுவாமி வயது 26
7.கார்த்திகேயன் த/பெ. பார்த்திபன் வயது 22
8.கண்ணன் த/பெ. முருகேசன், வயது 23

9.வைரமுத்து த/பெ. சின்துரை வயது 29.

10.மித்துன் த/பெ. பில்லு வயது 25

11.கார்த்திக் த/பெ பழனி, வயது 22

12. ஆனந்த் (எ) ஆனந்தபாபு த/பெ. சந்திரசேகர், வயது 30

13. மணிமாறன் த/பெ. முனியன் வயது 23

14.பிரபாகரன் த/பெ. திருமால் வயது 27

15.ஹர்ஷாநாமத் த/பெ.நசீர் அகமது வயது 22

16. பிரபாகரன் த/பெ. ஆனந்தன் வயது 23

17.கார்த்திக் த/பெ. மகாலிங்கம் வயது 26

18.கணேஷ், த/பெ.ரவி வயது 23

19.அருள் த/பெ. செல்வம் வயது 28

20. மணிஷ்குமார் த/பெ. நிரஞ்சன் வயது 23

21.தினேஷ் த/பெ.முருகேசன், வயது 25

22.குந்தன் த/பெ. கல்லுராம் வயது 24

23.அறிவழகன் , த/பெ. முனுசாமி, வயது 29

24.ராஜூ த/பெ. முனுசாமி வயது 28

25.பூமிநாதன் த/பெ.முனியப்பன், வயது 25

26.சித்திக் த/பெ. அப்துல் அசில் வயது 27

27.மேகநாதன் த/பெ. வெங்கடேசன் வயது 24

28.ஆரிப் த/பெ. நவாப், வயது 30

29.இளவரசன், த/பெ.சுவாமிநாதன், வயது 23

30.பிட்டிராம் த/பெ. ஜெயபால்சிங், வயது 22

31.முருகன் த/ப. அண்ணாதுரை வயது 27

32.அண்ணாமலை, த/பெ. வினோபா, வயது 26

33.அருண் (எ) அருண்குமார், த/பெ. அன்பழகன் வயது 28

இதற்கிடையே நேரக்காப்பாளருக்கு அருகே சாட்சி மணிகண்டனை நிற்கவைத்து எனது அலுவலக உதவியாளர் அடையாள அணிவகுப்பு நடத்தும

இடத்திற்கு வந்து சேர்ந்தார். நான் எனது அலுவலக உதவியாளரை மீண்டும் அனுப்பி சாட்சி மணிகண்டனை அழைத்து வருமாறு கூறினேன். சாட்சி மணிகண்டன் அடையாள அணிவகுப்பு நடக்கும் இடத்திற்கு முன்பு வந்ததும் அவருக்கு முன்பாக நின்றிருந்த 33 நபர்களை அவர் ஏற்கனவே யாரையாவது பார்த்துள்ளீர்களா என்று தொட்டு அடையாளம் காண்பிக்க சொன்னேன். சாட்சி மணிகண்டன் வலதில் இருந்து இடமாக நடந்து வந்து வலதில் இருந்து 4 வதாக நின்றுகொண்டிருந்த **ரஞ்சித் த/பெ. ராஜி வயது 28** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு வலதில் இருந்து 12 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த **ஆனந்த் (எ) ஆனந்தபாபு த/பெ. சந்திரசேகர், வயது 30** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். வலதில் இருந்து 30 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த **அருண் (எ) அருண்குமார், த/பெ. அன்பழகன், வயது 28** என்பவரை தொட்டு அடையாளம் காண்பித்தார். பிறகு நான் சாட்சி மணிகண்டனை சிறைச்சாலையில் இருந்து வெளியே செல்லுமாறு அறிவுறுத்தினேன். 3 முறை அடையாள அணிவகுப்பு நடத்திய பிறகு சந்தேக எதிரிகள் மூவரிடமும் இந்த அடையாள அணிவகுப்பு பற்றி எதுவும் கூறவேண்டுமா என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஆனந்த் (எ) ஆனந்தபாபு த/பெ சந்திரசேகர் என்பவர் தான் காவல் நிலையத்தில் சொன்னது தான் வேறு ஒன்றும் தற்சமயம் கூறுவதற்கு இல்லை என்று கூறினார். அதனை பதிவு செய்துகொண்டு அவரிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டேன். பிறகு அருண், த/பெ. அன்பழகன் என்பவர் தான் காரின் உரிமையாளர் என்றும் சவாரி இருக்கு என்று வந்தேன். பெண்ணை துாக்க வராங்க என்று எனக்கு தெரியாது. பெண் வந்து காரில் ஏறுனதால் பிரச்சனை ஆனது. ஆனந்தபாபு சம்பவம் நடைபெற்ற போது காரில் இல்லை ஸ்டேஷனில் வைத்துதான் போலீசார் சாட்சியிடம் காட்டினார்கள். சாட்சி தற்சமயம் ஆனந்தபாபு இருந்ததாக அடையாளம் எப்படி காட்டுறாருன்னு தெரியவில்லை என்று கூறினார். அதனை பதிவு செய்துகொண்டு அவரிடம் கையொப்பம் பெற்றேன். ரஞ்சித் த/பெ ராஜி என்பவர் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று கூறினார். அதனை நான் பதிவு

செய்துகொண்டு ரஞ்சித்திடம் கையொப்பம் பெற்றுக்கொண்டேன். மேற்கண்ட 3 சந்தேக எதிரிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்துகொண்டு அவர்களிடம் படித்து காண்பித்து கையொப்பம் பெற்றுக்கொண்டு எனது அடையாள அணிவகுப்பை முடித்துக்கொண்டேன். நான் அடையாள அணிவகுப்பு நடத்திய போது எதிரிகளை சாட்சி மணிகண்டனுக்கு யாரும் அடையாளம் காண்பிக்காதவாறும் அவர்கள் உடைகள் மாற்றும் போது மாறி நின்ற சமயத்திலும் சாட்சிக்கு தெரியாத வண்ணம் சாட்சியை தனியாக நேரக்காப்பாளருக்கு அருகே நிறுத்தி வைத்திருந்தேன். யாரும் சாட்சிக்கு எதிரிகளை சைகை மற்றும் சமிக்ஞை செய்து அடையாளம் காண்பிக்காதவாறு பார்த்துக்கொண்டேன். எனது அடையாள அணிவகுப்பை மாலை 4.30 மணிக்கு தொடங்கி 5.10 மணிக்கு முடித்து எதிரிகளின் அசல் வாக்குமூலம் வேலூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் செயல்முறை ஆணை அடையாள அணிவகுப்பு கோரி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள், வேலூர் சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் மற்றும் சாட்சிக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணை ஆகியவற்றுடன் எனது அறிக்கையை வாலாஜா நீதித்துறை நடுவர் எண் 2 அவர்களுக்கு டிஸ் நம்பர் 3501/2015, நாள் 22.12.2015 ன் படி அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் வேலூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு சமர்ப்பித்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.15** ஆகும். வேலூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அடையாள அணிவகுப்பு நடத்துமாறு எனக்கு அனுப்பிய செயல்முறை ஆணை **அ.சா.ஆ.16** ஆகும். நான் சாட்சி மணிகண்டனுக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணை **அ.சா.ஆ.17** ஆகும். நான் வேலூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்ய அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.18** ஆகும். அடையாள அணிவகுப்பு சம்மந்தப்பட்ட என்னுடைய அறிக்கை **அ.சா.ஆ.19** ஆகும்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சிறையில் உள்ள நேரக்காப்பாளர் அறையிலிருந்து சிறையில்

அமைந்துள்ள நீதிமன்றம் 3 நிமிட நேரத்திற்குள் நடந்து செல்லும் தொலைவில் உள்ளது. நான் எனது மடிக்கணினியை என்னுடன் அடையாள அணிவகுப்பு எடுத்துசென்று எனக்கு தட்டச்சு தெரிந்த காரணத்தினால் நான் அடையாள அணிவகுப்பு நடைமுறையை நேரடியாக தட்டச்சு செய்தேன். அந்த விவரத்தை என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையில் சந்தேக எதிரிகள் குறித்து எதாவது அடையாளங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சி மணிகண்டன் நான் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு முன்பாக அடையாள அணிவகுப்பில் பங்குபெற்ற எதிரிகள் சம்மந்தப்பட்ட அடையாளங்கள் உயரம், நிறம் மற்றும் உருவ அமைப்பு குறித்து எதுவும் சொல்லவில்லை. மேற்படி மணிகண்டன் அடையாள அணிவகுப்பில் பங்குபெற்ற எதிரிகளின் உயரம், நிறம் மற்றும் உருவ அமைப்பு குறித்து எதுவும் கூறாத நிலையில் எதிரிகளுடைய உயரம் நிறம் மற்றும் உருவஅமைப்பிற்கு ஒத்தவாறு மாதிரிகளை எவ்வாறு தேர்வு செய்தேன் என்றால் நான் எதிரிகளை சிறைச்சாலை நீதிமன்ற அறையில் பார்த்து அதை ஓத்து அவர்களது உயரம், நிறம் மற்றும் உருவ அமைப்புக்கு ஒத்தவர்களை அடையாள அணிவகுப்பிற்காக தேர்வு செய்தேன். சுமார் 40 நபர்களை ஆஜர்படுத்தப்பட்டதில் நான் 30 நபர்களை தேர்வு செய்தேன். நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரத்தை தனியாக எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. மணிகண்டன் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தை அவர் தன்னிச்சையாக தான் கொடுத்தார். மேற்படி அடையாள அணிவகுப்பு நடைமுறைகள் மொத்தம் 40 நிமிடத்தில் நடத்தி முடிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சாட்சி மணிகண்டனிடம் தான் அடையாளம் காட்டவுள்ள எதிரிகளின் குற்ற செயல்கள் குறித்தும் அவர்களின் உருவ அமைப்பு, நிறம் மற்றும் உயரம் போன்றவற்றையும் விசாரித்து அவற்றை பதிவு செய்திருக்கவேண்டும் என்றால் விதிகள் படி சரிதான். முதல் தகவல்அறிக்கையில் அடையாளம் காட்டப்படவேண்டிய எதிரிகளின் பெயர் மற்றும் செயல்பாடுகள் குறித்து எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் அடையாள அணிவகுப்பை சாட்சி மணிகண்டனுக்கு

எதிரிகளை அடையாளம் காட்டுவதற்கு போதிய கால அவகாசம் கொடுக்காமல் மொத்தம் 40 நிமிடத்தில் அவசர கதியில் அடையாள அணிவகுப்பு நடத்தி முடித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி அடையாள அணிவகுப்பை விதிகள் முறைப்படி சரியாக நடத்தவில்லை என்றால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH